# GAT 2023

| | | |
|---|---|---|
| வினாத் தொகுப்பிலுள்ள பக்கங்களின் எண்ணிக்கை : **24**<br>No. of pages in Question Booklet : **24** | Question Booklet Series<br>**A** | Question Booklet Serial No.<br>25389 |

| | |
|---|---|
| 1. தேர்வு எண் (தேர்வு அனுமதி சீட்டில் உள்ளவாறு)<br>Roll No. (As in Hall ticket) | |
| 2. பாடம்<br>Subject | **002 – ENGLISH** |
| 3. OMR விடைத்தாள் எண் (விண்ணப்பதாரரே நிரப்ப வேண்டும்)<br>OMR Answer Sheet No. (To be filled in by the candidate) | |
| 4. விண்ணப்பதாரரின் பெயர் (விண்ணப்ப படிவத்தில் நிரப்பியுள்ளபடி)<br>Candidate's Name (As given in Application form) | |
| 5. விண்ணப்பதாரரின் கையொப்பம் (விண்ணப்ப படிவத்தில் நிரப்பியுள்ளபடி)<br>Candidate's Signature (As given in Application form) | |
| 6. கண்காணிப்பாளரின் கையொப்பம்<br>Invigilator's Signature | |

இந்த வினாத்தாளில் 180 கொள்குறிவகை வினாக்கள் உள்ளன. இந்த வினாத் தொகுப்பானது இரு பகுதிகளை கொண்டது. **பகுதி-"அ"**-வில் 30 வினாக்கள் உள்ளன. வினா எண் 1 முதல் 20 வரை இரண்டு மதிப்பெண் வினாக்களும், 21 முதல் 30 வரை ஒரு மதிப்பெண் வினாக்களும் கொண்டுள்ளது. **பகுதி-"ஆ"** 150 ஒரு மதிப்பெண் வினாக்களைக் கொண்டுள்ளது. விண்ணப்பதாரர் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். தவறான விடைகளுக்கு மதிப்பெண் குறைக்கப்பட மாட்டாது.

This booklet contains 180 multiple choice questions. This Question Booklet is made up of 2 Parts. Part "A" contains 30 questions (Q. No. 1 to 30). Q. No. 1 to 20 is of 2 marks each. Question No. 21 to 30 is of 1 mark each. Part "B" contains 150 questions (Q. No. 31 to 180). Each question is of 1 mark each. There is no negative marking for wrong answer.

அரசாணை எண் (Ms) எண் 49, மனித வளம் (M) துறை நாள் 23.05.2022 -ன்படி மாற்று திறனாளிகள் கட்டாய தமிழ் தேர்விலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

As per G.O. (Ms) No. 49, Human Resources (M) Department, dated 23.05.2022 differently abled candidates are exempted from the Compulsory Tamil Language eligibility test.

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட கால அளவு | பொது தேர்வர்கள் | 210 நிமிடங்கள் |
| | மாற்றுத்திறனாளி தேர்வர்கள் | 240 நிமிடங்கள் |
| Allotted time | General candidates | 210 minutes |
| | Differently abled candidates | 240 minutes |

**(இறுதிப் பக்கமான பக்கம் எண் 23, 24 ல் தரப்பட்டுள்ள தமிழ் மற்றும் ஆங்கில வழி குறிப்புகளை படிக்கவும்)**

SPACE FOR ROUGH WORK

## PART - A

1. 'கிடந்த' - என்ற சொல்லின் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

(A) கிடந்து + அ

(B) கிட + ந்(த்) + த

(C) கிட + ந் + த் + அ

(D) கிட + த் (ந்) + த் + அ

2. விடுபட்ட சொற்களைக் கண்டுபிடிக்கவும் :

இரத்தலும் __________ போலும் கரத்தல் __________ தேற்றாதார் மாட்டு.

(A) சாதலே, இம்மையும்

(B) வாழ்தலே, மறத்தலும்

(C) ஈதலே, கனவிலும்

(D) காத்தலே, இன்மையும்

3. செந்தாமரை → இச்சொல்லின் சரியான புணர்ச்சி விதிகளைத் தேர்ந்தெடுக்கவும் :

(A) ஈறுபோதல் + இனமிகல்

(B) ஈறுபோதல் + ஆதிநீடல்

(C) ஈறுபோதல் + தன்னொற்று இரட்டல்

(D) ஈறுபோதல் + முன்னின்ற மெய் திரிதல்

4. முரண்படு மெய்ம்மை என்ற சொல் உணர்த்துவது யாது ? சரியான விடையைக் காண்க.

(A) முரண்படுவது போல் முரண்படாத மெய்ம்மை

(B) முரண்படாதது போல் முரண்படுகிற மெய்ம்மை

(C) முரண் தொடை தொடுக்கப் பெறும் மெய்ம்மை

(D) எதிர்ச் சொல்லாக அமையப் பெறும் மெய்ம்மை

5. பொருத்துக :

| அசைகள் | வாய்பாடு |
|---|---|
| (அ) நேர் நேர் நிரை | (1) புளிமாங்காய் |
| (ஆ) நிரை நிரை நேர் | (2) கூவிளங்கனி |
| (இ) நிரை நேர் நேர் | (3) தேமாங்கனி |
| (ஈ) நேர் நிரை நிரை | (4) கருவிளங்காய் |
| | (5) தேமாங்காய் |

| | (அ) | (ஆ) | (இ) | (ஈ) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (1) | (4) | (5) |
| (B) | (4) | (2) | (1) | (3) |
| (C) | (3) | (4) | (2) | (1) |
| (D) | (3) | (4) | (1) | (2) |

6. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல் :

வாழை இலைக்கு தமிழர் இடமுண்டு தனித்த பண்பாட்டில்

(A) வாழை இலைக்கு பண்பாட்டில் தமிழர் தனித்த இடமுண்டு

(B) வாழை இலைக்கு தனித்த பண்பாட்டில் இடமுண்டு தமிழர்

(C) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.

(D) தமிழர் தனித்த பண்பாட்டில் இடமுண்டு வாழை இலைக்கு.

7. கீழ்க்கண்ட தொடர் எதனைக் குறிக்கிறது ?

பொசுக்குகிறது வெயில்.

(A) எழுவாய்த் தொடர்

(B) வினைமுற்றுத் தொடர்

(C) விளித் தொடர்

(D) பெயரெச்சத் தொடர்

8. ‘மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன் வா’ - இத்தொடரில் கோடிட்ட சொல் எவ்விதிப்படி புணர்ந்துள்ளது ?

(A) ‘உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்’

(B) ‘உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’

(C) ‘‘ ‘ல, ள’ வேற்றுமையில் ‘ற, ட’ வும்’’

(D) ‘மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்’.

9. அமைச்சருக்குரிய கடமைகள் என, ‘‘நன்று, தீது, இவற்றை ஆராய்தல்; அதுமட்டுமின்றி அன்பும், அறனும் தவறாது காக்க வேண்டும்’’ என்று குறிப்பிடும் சங்க நூல் எது ?

(A) மதுரைக் காஞ்சி

(B) புறநானூறு

(C) கலித்தொகை

(D) சிறுபாணாற்றுப்படை

10. ‘‘உணர்வு பொங்கி கவிதை படைக்கும் நேரங்களில் தடையாக விளங்கும் யாப்பு எளிதாக வடிவம் கொள்ள வித்திட்ட கவிஞர் யார் ?’’

(A) நப்பூதனார்

(B) இளங்கோவடிகள்

(C) பாரதியார்

(D) பாரதிதாசன்

11. தவறான இணையைத் தேர்வு செய்க :

(A) அன்மொழித் தொகை - சிவப்புச் சட்டை பேசினார்

(B) பண்புத் தொகை - வட்டத்தொட்டி

(C) உவமைத் தொகை - முறுக்கு மீசை வந்தார்

(D) உம்மைத் தொகை - அண்ணன் தம்பி

12. சரியான விடையைத் தேர்வு செய்க :

(1) மா.பொ. சிவஞானம் சிலம்புச் செல்வர் என்று போற்றப்படுபவர்.

(2) சட்ட மேலவைத் தலைவராகப் பதவி வகித்துள்ளார்.

(3) பாரத மணி, கிராம ஊழியன் ஆகிய இதழ்களில் பணிபுரிந்தார்.

(A) கூற்று (1) மற்றும் (3) சரி

(B) கூற்று (1), (2) சரி

(C) கூற்று (3) மட்டும் சரி

(D) கூற்று (1) மட்டும் சரி

13. வஞ்சப்புகழ்ச்சி அணிக்குப் பொருத்தமான குறளைக் கண்டறிக :

(A) தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான்.

(B) சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்.

(C) மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாம்கண்ட தில்.

(D) கரப்பிடும்பை இல்லாரைக் காணின் திரப்பிடும்பை
எல்லாம் ஒழுங்கு கெடும்.